# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI
## CC.No.73/2024

Deposition of witness for Prosecution அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுதா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.04.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் பாவனக்கோட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.01.2024 ம் தேதி இரவு 9 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் இருந்தபோது 1,2 எதிரிகள் மது போதையுடன் என்னுடைய வீட்டிற்கு வெளியில் நின்று குடிபோதையில் தேவிடியா என்று அசிங்கமாக பேசினார்கள். நான் ஏன்பா இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு 1,2 எதிரிகள் என்னை கன்னத்தில் ஓங்கி அறைந்தார்கள். பின்பு 3 ம் எதிரி நாச்சிக்கண்ணு என்ற ரவி உன்னை கொல்லாமல் விட மாட்டேன் தேவிடியா புண்ட மவளே என்று அசிங்கமாக திட்டினார். எனக்கு உடம்பில் காயம் இல்லை என்பதாலும் இரவு நேரம் என்பதாலும் மறுநாள் காலையில் வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம்

காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி புகார் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என் வீட்டை கடந்துதான் எதிரிகள் அவர்கள் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் ஆமாம். நான் எதிரிகள் வீட்டிற்கு போகும் பாதையை சேலையை வைத்து வேலி போல் அடைத்துள்ளேன் என்றால் இல்லை. என் வீட்டிற்கு முன்பு வேலி எதுவும் இல்லையா என்றால் ஆமாம். நான் பாதையை மறைத்து வேலி கட்டியிருக்கிறேன் என்றும் அதை ஊர்க்காரர்கள் வந்து கேட்டதால் எதிரிகள் தான் மேற்படி பாதை வழியாக சென்று வருகிறார்கள் என்பதால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல நான் எந்த பாதையையும் அடைக்கவில்லை. புகாரை நான்தான் எழுதினேன். புகாரில் இடப்பிரச்சனை இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கும் எதிரிகளுக்கும் எந்த இடப்பிரச்சனையும் கிடையாது, அங்கிருந்த சார் ஒருவர் அவ்வாறு சொன்னார். என் வீட்டின் முன்னால் இடம் சம்பந்தமாக என் புகாரில் சொல்லியுள்ளதும் அந்த சார் சொன்னதுதானா என்றால் விசாரணையின்போது அந்த சார் சொன்னார். நான் சார் என்று வேலாயுதப்பட்டிணம் காவல் நிலைய போலீசை குறிப்பிடுகிறேனா என்றால் ஆமாம். அவர் சொல்ல சொல்லதான் நான் புகாரை எழுதியுள்ளேனா என்றால் ஆமாம். அந்த சாரின் பெயர் தெரியுமா என்றால் இல்லை. அந்த சார் எனக்கு உறவினரா என்றால் இல்லை. சாட்சிகள் அம்பிகா மற்றும் ரதிதேவி என் சகோதரிகள். அவர்கள் சொன்ன யோசனையின் பேரில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். உண்மையில்

சம்பவம் நடந்திருந்தால் அன்று இரவே காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல, அன்று இரவே போனில் தகவல் சொன்னேன். என்னிடம் வண்டி எதுவும் இல்லாததால் இரவில் செல்ல முடியவில்லை, அதனால் மறுநாள் காலையில் சென்றேன். போலீசார் சம்பவத்தை நேரில் பார்த்தார்கள். இரவு ரவுண்ட்ஸ் வந்த போலீசாரில் ஒருவர் நேரில் பார்த்தார். உண்மையில் சம்பவம் எதுவும் நடந்திருந்து எதிரிகள் என்னை அடித்திருந்தால் நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பேன் என்றும் இடப்பிரச்சனை காரணமாக பொய் புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை தேவிடியா மவளே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசவில்லை என்றும் நான் மிகைப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் முதல் 5 வரிகள் மட்டும்தான் என்னுடைய கையெழுத்து மற்றவைகள் எல்லாம் என் தங்கை என் கையெழுத்து நன்றாக இல்லாததால் அவர் தொடர்ந்து எழுதினார். புகாரில் சம்பவம் நடந்தபோது ரவுண்ட்ஸ் வந்த போலீசார் வந்தார்கள் என்று சொன்னேனா என்றால் புகாரில் சொல்லவில்லை அந்த சாரிடம் சொன்னேன்.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.73/2024**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஜயா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சுப்பிரமணியன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.04.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் பாவனக்கோட்டையில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கை. எதிரிகள் என் தம்பிகள். சம்பவம் நடக்கும்போது நான் வீட்டில் இல்லை. நான் போலீசாரிடம் நடந்தது தெரியாது நான் வீட்டில் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 02.02.2024 ம் தேதி வேலாயுதப்பட்டிணம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 27.01.2024 ம் தேதி இரவு 9.30 மணிக்கு 1, 2 எதிரிகள் அ.சா.1ன் வீட்டின் முன்பாக நின்றுகொண்டு அசிங்கமாக திட்டினார்கள் என்றும்

அ.சா.1 ஏன் திட்டுகிறீர்கள் என்ற கேட்டபோது 1,2 எதிரிகள் அ.சா.1 ஐ கன்னத்தில் ஓங்கி அறைந்தார்கள் என்றும் அப்போது அங்கு வந்த 3 ம் எதிரி அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டினார் என்றும், கொலை மிரட்டல் செய்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை:**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.